சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. 153 / 2016

பெயர்: சாந்தி (வா.சா.1) 02.06.2023

2 முதல் 4 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது அம்மா பெயர் பாப்பம்மாள். அசல் வழக்கு எண்.95/2014 என்ற வழக்கை குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கானது எனது பெயரில் ஏற்பட்ட ஒரு கிரையபத்திரத்தில் உள்ள சொத்து சம்பந்தமானது என்றால் சரிதான். அந்த சொத்து எனது பெயரில் கிரையம் பெறப்பட்டு இருந்தாலும் அது எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனது அம்மா கட்சி செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை எனது அம்மா தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 15 வருடங்களாக எனக்கும் எனது அம்மாவிற்கும் பிரச்சனை இருந்து வந்தது. ஏற்கனவே நான் எனது அம்மா மற்றும் எனது உடன் பிறந்தோருக்கு எதிராக ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கை சொத்தை பிரித்து தருவதாக கூறியதால் திரும்ப பெற்றுக்கொண்டேன். அசல் வழக்கு எண்.95/2014 எனக்கு ஆதரவாக தீர்ப்பு ஆனது அதனை எதிர்த்து எனது அம்மா கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.22/2019 தாக்கல் செய்தார் என்றால்சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. எனது அம்மா அரிசி வியாபாரம் செய்யவில்லை. எனது அம்மா பெயரில் வருமான வரி நிரந்தர கணக்கு இருந்ததா என்று எனக்கு தெரியாது. எனது அம்மா வியாபாரம் எதுவும் பண்ணவில்லை. பி பட்டியல் 1ம் இலக்க சொத்தில் 2 கடை மற்றும் 6 வீடுகள் உள்ளது. அந்த சொத்து முதலில் சுப்பையா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் 1970 ம் வருடம் பிறந்தேன். தாவா பி பட்டியல் 1ம் இலக்க சொத்தை எனது அம்மா கிரயைம் பெற்றது எனக்கு நேரடியாக தெரியாது. <u>என்னிடம் காட்டப்படும் அசல் கிரயப்பத்திரம் எனது அம்மா தாவா பி பட்டியல் 1ம் இலக்க சொத்தை கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1</u> தாவா பி பட்டியல் 1 ம் இலக்க சொத்தில் உள்ள 2 கடைகளைப் பொருத்து எனது அம்மா உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு இரண்டு மாதத்திற்கு முன்பு தான் தெரிய வந்தது. எனது அம்மாவின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் 05.02.2019 தேதிய உயிலில் உள்ள கையொப்பங்கள் எனது அம்மாவினுடையதா என்று எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் மேற்படி உயிலில் உள்ள புகைப்படங்கள் எனது அம்மாவின் புகைப்படங்கள் ஆகும். மேற்படி உயில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 12.06.2019 தேதியிட்ட

பதிவு செய்யப்பட்ட உயிலில் உள்ள புகைப்படங்கள் எனது அம்மாவினுடையது தான். 7ம் பிதிவாதி தனம் என்பவரின் மகன் பெயர் பிச்சை என்றால் சரிதான். 12.06.2019 தேதியிட்ட என்னிடம் காட்டப்படும் உயிலில் உள்ள கையொப்பங்கள் எனது அம்மாவினுடையதா என்று எனக்கு தெரியவில்லை. தாவா பி பட்டியல் 2ம் இலக்க சொத்து எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்தாகும். எனது அப்பா மேற்படி சொத்தை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. எனது அப்பா மேற்படி சொத்தை சுப்பையா என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார். எனது அப்பா 07.02.1975 ல் மேற்படி சொத்தை கிரையம் வாங்கியுள்ளார். அந்த சொத்தை பொறுத்து வரி விதிப்பு எனது அப்பா பெயரில் உள்ளது. 4ம் பிரதிவாதி கோபாலின் மகன்கள் சுந்தராஜன் மற்றும் மணிகண்டன் ஆவார்கள். எனது தகப்பானார் 07.05.2008 ல் தாவா பி பட்டியல் 2ம் இலக்க சொத்தை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 07.05.2008 தேதியிட்ட உயில் நகலில் உள்ள புகைப்படம் எனது அப்பாவினுடையது தான். அந்த உயில் உள்ள சாட்சி கையொப்பம் எனது அம்மாவினுடையதா என்று எனக்கு தெரியாது எனது அம்மா பெயர் உள்ளது. தாவா பி பட்டியல் 2ம் இலக்க சொத்தை அடமானம் வைத்து 4ம் பிரதிவாதி வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா பி பட்டியல் 1, 2 இலக்க சொத்துகளுக்கு வரி யார் செலுத்தி வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான் என் பெயரில் வீட்டு வரி எதுவும் செலுத்தவில்லை. எனக்கு 1988 ம் வருடம் திருமணமானது. தாவா பி பட்டியல் 3ம் இலக்க சொத்தை எனது அம்மா யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்று எனக்குதெரியாது. தாவா பி பட்டியல் 1,3 இலக்க சொத்துக்களை எனது அம்மா எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி வடிவேலின் மகன் பெயர் சக்திவேல். என்னிடம் காட்டப்படும் 07.05.2008 தேதியிட்ட உயில் பத்திரத்தின் புகைப்பட நகலில் உள்ள புகைப்படம் எனது அம்மாவினுடையதாகும். வடிவேல் தான் எனது அம்மாவின் கடைசி மகனாவார். பி பட்டியல் 3ம் இலக்க சொத்தை பொறுத்து எனது அம்மா 07.05.2008 தேதியில் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா பி பட்டியல் 4ம் இலக்க சொத்தை எனது அம்மா 22.03.2006 ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அசல் கிரையப்பத்திரம் எனது அம்மா 22.03.2006 ல் மேற்படி சொத்தை கிரையம் பெற்ற அசல் கிரைய ஆவணம் என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படும் 30.09.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் புகைப்பட நகலில் உள்ள புகைப்படங்கள் எனது அம்மாவினுடையது ஆகும். எனது அம்மா பி பட்டியல் 4ம் இலக்க சொத்தை பொறுத்து 30.09.2013 தேதியில் 4 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துளளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா பி பட்டியல் 4ம் இலக்க சொத்தை தற்போது 4 மற்றும் 6 பிரதிவாதிகள் அனுபவம்

செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா பி பட்டியல் 5ம் இலக்க சொத்தை எனது அம்மா 25.04.1974 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அசல் கிரைய ஆவணம் எனது அம்மா பெயரிலுள்ள கிரையப்பத்திரம் ஆகும் அது பி.வா.சா.ஆ-3 அந்த ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும 20.07.2010 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயிலில் உள்ள புகைப்படம் எனது அம்மாவினுடையது தான். தாவா எ பட்டியல் சொத்து முழுவதும் வீடு தான் உள்ளது. அந்த வீட்டிலிருந்து வருமானம் உள்ளதா என்றால் இல்லை. எனது அப்பாவின் அப்பா பெயர் பட்டன் செட்டியார். பட்டன் செட்டியார் இயற்கை மரணம் அடையவில்லை கொலை செய்யப்பட்டார். தாவா எ பட்டியல் சொத்தில் தான் பட்டன் செட்டியார் கொலை செய்யப்பட்டார். எனது தாத்தாவின் சம்மந்தி கொலை செய்துவிட்டார் என வழக்கு நடந்து 7 வருடம் தண்டனை வழங்கியதாக கேள்விப்பட்டேன். எனது பாட்டானாருக்கு பின்பு எனது அம்மா அவரது வீட்டில் குடியிருந்து வந்தார். பட்டன் செட்டியாரின் வாரிசுகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது தாத்தா பட்டியன் செட்டியாருக்கு தனித்து பாத்தியப்பட்டு 2 ஏக்கர் சொத்து இருந்தது. அந்த இரண்டு ஏக்கர் சொத்து தெலுங்கப்பட்டியல் உள்ளது அது புஞ்ஜை நிலமாகும். அந்த இரண்டு ஏக்கரில் எனது அப்பாவிற்கு 6 ல் ஒரு பாகம் கிடைத்தது அந்த 1 பாகத்தை எனது அப்பா விற்பனை செய்துவிட்டார். அந்த சொத்தை கிருஷ்ணன், முருகன் பழனிசாமி ஆகியோருக்கு விற்பனை செய்துவிட்டார். எனது அப்பா 1998 ல் அந்த சொத்தை விற்பனை செய்தாரா என்றால் இருக்கலாம். எனது அப்பா கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை நான் நகல் பெற்று பார்த்தேன். அந்த கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எனது அப்பா கிரயைம் கொடுத்த சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்று எனக்கு தெரியாது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம் / சாந்தி

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.